முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 11 திகதி முதல்

சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 18 திகதி வரை

(27.11.2022 ஞாயிறு முதல் 04.12.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. அன்னதான வள்ளலாக அருளி
   அகிலம் மாற்றும் மாதருமத்தை
   மண்ணுலகம் எங்கும் கிளைகளாக்கி
   மாதருமம் வளர்க்கும் அரங்கனே
2. அரங்கனே தேசிகனே உமைபோற்றி
   அகத்திய மகரிஷி யானுமே
   வரமென இந்தியா தமிழகத்தில்
   வருங்கால பலன் குறித்த ஆசிதனை
3. ஆசிதனை சுபகிருது தேள்திங்கள்
   அய்யமற லாபதிகதிமேல் மூவாறுதிகதி வரை
   பேசிட நடக்கும் நிகழ்வாக உரைப்பேன்
   பெருமழை புயல்வடிவாக வந்து
4. வந்துமே சில அழிவுகள் காணும்
   வல்லமைபட ஆனாலும் அரசின்
   சிந்தைவழி செயல்பாடுகள் தானும்
   சில பாதுகாப்பாக மாறிவரும்
5. வருகவே இயற்கை இடர்களே
   வதைகளே மனிதன் தன்னை
   தருமசிந்தைக்குள் வரவே நடக்கின்றது
   தானிவற்றை அறியா பல மானுடங்கள்
6. மானுடங்கள் சுயநலம் கூட்டி
   மமதைபட பதவி சுகம் வழி
   தானும் தன்குடியும் உயரவே
   தனதாக்கி பொதுநிதி ஆஸ்தி என
7. என சுருட்டிப் பதுக்கியே
   எதேச்சதிகாரம் புரிந்து வர
   ஞானமிலா சுயநலவான்கட்கு
   நமனாக நசிவாகச் சூழல் மாறும்
8. மாறவே பேரிடர் காலத்திலாவது
   மனமாற்றம் அடைந்து உண்மை
   அறம்வழி சேவை ஆற்றிட
   அதிகாரம் ஆளுமை அனைத்தையும்

9. அனைத்தையும் மக்களை நோக்கி
ஆற்றலுடன் தயவாக நடத்திட
இனிவரும் காலம் ஆகிலும்
இயற்கை வழி பேராபத்து அணுகா

10. அணுகா பாதுகாப்பு பெருகி
ஆறுமுகப் பெருமான் ஆசிபட
ஞானவாழ்வாக மக்களிடையே
நம்பிக்கைதரும் ஆட்சியாக இந்தியா தமிழகம் அடையும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 11 ம் நாள் 27.11.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் கார்த்திகை மாதம் 18 ம் நாள் 04.12.2022 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

அன்னதானமே பிரதானமாகக் கொண்டு ஜீவதயவே ஞான வீட்டின் திறவுகோல் என்பதை உலகிற்கு உணர்த்தி அன்னதான வள்ளலாக அவதரித்து இவ்வுலகையே மாற்றும் வல்லமை மிக்க தருமத்தினை உலகமெங்கும் கிளைகளை உருவாக்கி மாதருமங்களைச் செய்து உலகமெங்கும் தருமத்தை வளர்க்கும் மாதரும ராசனே ஆறுமுக அரங்க மகா தேசிகனே உம்மை போற்றியே அகத்திய மகரிஷி யானும் இந்தியா தமிழகத்தில் சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 11 ம் நாள் 27.11.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் கார்த்திகை மாதம் 18 ம் நாள் 04.12.2022 ஞாயிற்றுக்கிழமை வரை நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி. வருகின்ற காலத்தில் புயல் உண்டாகி பெருமழை பெய்திட வாய்ப்புகள் உள்ளது. பெருமழையினால் சில அழிவுகளும் நிகழக்கூடும். ஆனாலும் நாட்டை ஆளும் அரசு எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் அழிவுகள் ஏற்படாமல் தடுக்கப்படும்.

இயற்கை சீற்றங்களும், உயிர்பலிகளும் தர்மம் செய்வதை மறந்திட்ட மனிதர்களை தருமம் செய்ய வைத்திடவும் மக்களுக்குள் தரும சிந்தை வளர்க்கவும் வேண்டியே வருகின்றது இதை அறியாமல் மனிதர்கள் தருமம் மறந்து பொது நலம் மறந்து சுயநலத்துடன் நடப்பதும், மக்களை காக்கவே உள்ள பதவிகளை அடைந்ததும் பதவி சுகத்தினால் மதிமயங்கி மமதைபட நடந்து தானும் தனது குடும்பங்களும் செல்வாக்குடன் வாழ்வதற்காக பொது உடமைகளையும், பொருளையும் தனது உடமைகளாக ஆக்கி சொத்து சேர்த்தும் பணம் சேர்த்தும் பதுக்கியும் தன்னிச்சையாக சர்வாதிகாரமாக நடந்து வந்தால் மதியிழந்த அந்த சுயநலவாதிகளுக்கு அவர்கள் செய்திட்ட பாவச் செயல்களே அழிவாக மாறிடும் சூழல் உருவாகிடும்.

ஆகவே இதுவரை சுயநலமாக நடந்திட்டாலும் இனியாகிலும் பேரிடர் காலத்திலாவது நீங்கள் மனம் மாறி உண்மையுடன் நடந்து தர்மத்தின் வழியில் சென்று மக்களுக்கு சேவைகளை குறையின்றி செய்திட்டால், அதிகாரத்தையும் ஆட்சியின் பயனையும் மக்களை நோக்கி ஆற்றலுடன் செயல்படுத்தி மக்கள் மீது தயவுடன் நடந்து கொண்டால் இனி வரும் காலத்தில் இயற்கையின் மூலமாக வருகின்ற பேராபத்துகள் நாட்டினில் குறைந்திடுமப்பா. தர்மத்தின் வழி செல்லும் நாட்டினில் இயற்கையினால் பேராபத்து உருவாகாது இயற்கையே நாட்டிற்கு பாதுகாப்பாக மாறி தர்மத்தின் தலைவன் ஞானத்தின் தலைவன் முருகப்பெருமானின் ஆசியுடன் ஞான வாழ்வாக மாறி மக்களுக்கு நம்பிக்கையூட்டும் நல்லாட்சியாக ஆட்சியும் மாற்றம் பெற்று மக்கள் நல்வாழ்வை வாழ்ந்து சிறப்பார்கள் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி. –சுபம்–